பக்கங்கள்:-20

காலை முரசு

# பிள்ளையானின் சாரதியும் கைது!



(கனகராசா சரவணன்)

பிள்ளையான் என்றழைக்கப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் 07

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 06 | சனிக்கிழமை | 18.04.2025 | அதிர்வு 257

# தந்தை செலுத்திய டிப்பர் மோதி ஒன்றரை வயது குழந்தை சாவு!

## கிளிநொச்சியில் துயரம்

வீட்டில் நின்ற டிப்பர் வாகனத்தைத் தந்தை செலுத்திய போது அதன் சில்லுக்குள் அகப்பட்டு ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

கிளிநொச்சி – அம்பாள்குளம் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், 06



# தையிட்டி விகாரை விவகாரம்:

# பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களுக்கு மாறாகத் தமிழ்க் கட்சிகள் செயற்படவில்லை

## அநுரவின் கருத்துக்குக் கஜேந்திரகுமார் சாட்டையடி



(பிரபாகரன் டிலக்சன்)

“தையிட்டி விகாரைக்கு எதிரான மக்களின் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அல்லது வேறு தமிழ்க் கட்சிகளோ பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களுக்கு மாறாக எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் தேசிய மக்கள் சக்தியின் கருத்துக்கள் அல்ல. உண்மையான ஜே.வி.பியின் முகத்தையே அநுரகுமார வெளிக்காட்டியிருக்கின்றார்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06

# தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு

# ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க எந்தவித அருகதையும் கிடையாது!

## இப்படி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகின்றார்

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் உரையை விமர்சிக்கத் தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க வடக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஆற்றிய உரைகளைத் தமிழ்த் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் 07






உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள ஆர்வம் குறைந்த மட்டத்தில் இருப்பதாக தமது கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர் என ‘பவ்ரல்’ எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்திருக்கின்றார்.

அது உண்மைதான். இந்த உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் தேர்தல் ஆணையம் வெளிப்படுத்திய குழப்பகரமான பிரதிபலிப்புகள் மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பான ஈடுபாட்டை மங்க வைத்து விட்டன என்பதுதான் நிலைமை.

தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்கு எதிராக பல நூற்றுக்கணக்கில் வழக்குகள். 75 க்கும் மேற்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளச் சொல்லி மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு. அந்த உத்தரவு வழங்கப்பட்ட சபைகள், தரப்புகள் யாவை என்பது தொடர்பில் தேர்தல் ஆணையத்துக்கே குழப்பம். இதற்கிடையில் வரும் 24ஆம் திகதி முதல் 06




# யாழில் வெறுமனே 24 சதவீத வாக்குகளை மட்டும் வைத்துக்கொண்டு தப்புக்கணக்குப் போடாதீர்கள்!

## அநுர அரசுக்குக் கஜேந்திரகுமார் எச்சரிக்கை

(பிரபாகரன் டிலக்சன்)

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 76 சதவீதமான வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக வழங்கப்பட்டிருக்கின்றன. வெறுமனே 24 சதவீத வாக்குகளை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் மக்கள் நிராகரித்ததாக அநுர அரசு கணக்குப் பார்க்கின்றது எனில் நாட்டின் பொருளாதாரக் கணக்கு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை மக்கள் யோசிக்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபய ராஜபக்ஷவின் உண்மையான முகத்தை மக்கள் விளங்கிக்கொள்வதற்கு இரண்டு வருடங்கள் எடுத்தன. ஆனால், தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் இயங்கக்கூடிய ஜே.வி.பியினுடைய உண்மையான முகத்தை ஆறு மாதங்களிலேயே மக்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள். ஜே.வி.பி. கதைப்பது ஒன்றாகவும் செயற்படுவது ஒன்றாகவும் உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு முற்போக்குவாத கொள்கைகளை முன்வைத்து ஆட்சி செய்வோம் எனவும், தொழிலாளர்களுக்குத் துணையாக இருப்போம் எனவும் ஜே.வி.பியினர் கூறினார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களுக்குள்ளேயே அதற்கு நேர்மாறாக ஐ.எம்.எப். திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார முழு மூச்சாகச் செயற்படுகின்றார். இதனை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கம் போன்ற பல வாக்குறுதிகளை அநுர அரசு வழங்கிவிட்டு, அவை எவற்றையும் நிறைவேற்றாமல் புதிய வாக்குறுதிகளை இந்த அரசு வழங்குகின்றது. முதலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டு புதிய வாக்குறுதிகளை வழங்குங்கள்.

புலம்பெயர் தமிழர்கள் நாடு திரும்ப வேண்டும் என்ற அழைப்பை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரகுமார விடுத்திருக்கின்றார். இந்த நாட்டிலிருந்து தமிழர்களை வாழவிடாமல் திட்டமிட்ட இன அழிப்பு இடம்பெற்றதாலேயே பெருமளவான தமிழர்கள் புலம்பெயர்ந்தார்கள். தமிழர்கள் புலம்பெயர்ந்தமைக்கான அடிப்படைக் காரணத்தில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை.

இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பைவிட மோசமான அரசமைப்பை நிறைவேற்றவே இந்த அரசு முயற்சிக்கின்றது. இனப்பிரச்சினையில் சிக்குண்டு தப்பிப் பிழைப்பதற்காகப் புலம்பெயர்ந்தவர்களை எந்த அடிப்படையில் மீண்டும் நாட்டுக்கு ஜனாதிபதி அழைக்கின்றார்? என்ன அடிப்படையில் முதலீடுகளைசி செய்யுமாறு கூறுகின்றார்?

தமிழர்களுக்குத் தேவைப்படுகின்ற தீர்வைக் கொடுக்காமல் அவர்களிடம் முதலீடுகளை எதிர்பார்ப்பதானது இனவாதம் உங்கள் கண்களை மூடியிருப்பதையே காட்டுகின்றது. கடந்த கால அரசுகள் வெளிப்படையாக இனவாதப் போக்கில் செயற்பட்டன. ஆனால், ஜே.வி.பி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களில் மறைமுக இனவாதப் போக்கிலேயே செயற்படுகின்றது.

புலம்பெயர் தமிழ் மக்கள் இலங்கையில் முதலீடுகள் செய்வதாகவோ, இலங்கை அரசை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதாகவோ இருந்தால், தமிழ் மக்களின் தேச அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு சமஷ்டித் தீர்வை அரசு வழங்குகின்றபோதே புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் பாதுகாப்பாக இருக்கும் என்ற உத்தரவாதங்களைத் தமிழ்க் கட்சிகள் வழங்கக் கூடியதாக இருக்கும். அவ்வாறான நிலைமை இல்லாமல் ஒற்றையாட்சிக்குக் கீழே புலம்பெயர் தமிழர்கள் தங்கள் முதலீகளைச் செய்தால் அதற்கான எந்தவொரு உத்தவாதம் இல்லாமல் போகும்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு நிதியைக் கண்ணை மூடிக்கொண்டு வழங்குவோம் என ஜனாதிபதி கூறுகின்றார். ஜே.வி.பியினர் இனவாதிகள், ஜனநாயக விரோதிகள் என்பதைக் காட்டுவதற்கு ஜனாதிபதியின் இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைவிட வேறு சிறந்த உதாரணம் தேவைப்படாது.

பாரம்பரிய தமிழ்க் கட்சிகளைத் தமிழ் மக்கள் புறக்கணித்து தேசிய மக்கள் சக்திக்கு ஆணையை வழங்கியுள்ளனர் என்று கூறும் ஜனாதிபதி அநுரகுமார அந்த மக்கள் ஆணையை வைத்து தையிட்டி விகாரைப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாமே? யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெறுமனே 24 சதவீத வாக்குகளை மட்டுமே தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டது. 76 சதவீதமான வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக வழங்கப்பட்டிருக்கின்றன. 24 சதவீத வாக்குகளை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் மக்கள் நிராகரித்ததாக அரசு கணக்குப் பார்க்கின்றது எனில் நாட்டின் பொருளாதாரக் கணக்கு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை மக்கள் யோசிக்க வேண்டும்." – என்றார்.

# இம்மாதத்தின் முதல் 15 நாள்களில் சுற்றுலா பயணிகள் வருகை உயர்வு



இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டைவிட 38 சதவீதம் அதிகரித்து, 93,915 ஆக உயர்ந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அடிப்படையில் இந்தியா மற்றும் பிரித்தானியா முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 18,220 பேர் வருகை தந்துள்ளதுடன், பிரித்தானியாவிலிருந்து 11 ஆயிரத்து 425 பேர் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், ரஷ்யாவிலிருந்து 8,705 பேர் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு 816,191 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், இது கடந்த ஆண்டை விட 16 சதவீதம் அதிகமாகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# மன்னம்பிட்டியவில் துப்பாக்கிச்சூடு

மன்னம்பிட்டியவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தால் யாருக்கும் பாதிப்பு இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் மன்னம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குற்றப்புலனாய்வில் முறைப்பாடு




தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

தன்னையும் தனது மகளையும் பற்றிச் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வரும் புகைப்படங்கள் மற்றும் தவறான செய்தி தொடர்பிலேயே குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

அந்த செய்தியில் பிரதி அமைச்சர் தனது மகளின் பிறந்த நாளை முன்னணி உணவகம் ஒன்றில் கொண்டாடினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புகைப்படங்களில் காணப்படும் பிறந்த நாள் கொண்டாட்டம் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி கிரிஉல்ல பகுதியில் நடைபெற்றது எனப் பிரதி அமைச்சர் தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பான விடயங்களே தற்போது சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.




# ஶ்ரீதலதா புனித சின்னம் காட்சிப்படுத்தல் ஆரம்பம்

ஶ்ரீதலதா மாளிகையில் புனித சின்னத்தை வழிபடும் நிகழ்வை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க நேற்று ஆரம்பித்து வைத்தார்.

கண்டி ஶ்ரீதலதா மாளிகையிலுள்ள புத்த பகவானின் புனித தந்த தாதுவை ஜனாதிபதி வழிபட்டார்.

நேற்று ஆரம்பமான ஶ்ரீதலதா புனித சின்ன காட்சிப் படுத்தலில் புத்த பகவானின் புனித தந்த தாதுவை தரிசிப் பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் கண்டி நகரில் கூடியுள்ளனர்.





# 227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்குச்சீட்டுகள் விநியோகம் நிறைவு

அனைத்து தபால்மூல வாக்குச் சீட்டுகளையும் எதிர்வரும் 21 ஆம் திகதியளவில் விநியோகித்து நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்பின்னர் ஏதேனுமொரு நீதிமன்றத்தினால் அது தொடர்பில் வழக்கு தீர்ப்பு வழங்கப்படுமாயின் குறித்த உள்ளூராட்சி மன்றத்திற்கான தபால் மூல வாக்களிப்பு தாமதமாக வாய்ப்புள்ளது என அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்..

இதுவரை 227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

எஞ்சிய 112 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய ஏப்ரல் 24, 25, 28, 29 ஆகிய திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

# நாட்டின் சில பகுதிகளில் இன்று பலத்த மழை



நாட்டின் சில பகுதிகளில் இன்று பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, சப்ரகமுவ, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இந்தப் பகுதிகளில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக் கூடும்.

அதேநேரம், மேல் மாகாணத்திலும், காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யக்கூடும் எனவும், வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகின்றது. எந்தெந்த சபைகளுக்கு, எந்தெந்தத் தரப்புக்களை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருக்கின்றது என்பது தொடர்பில் மக்களுக்குத் தெளிவான வழிகாட்டுதல்கள் இல்லை. நீதிமன்ற உத்தரவுப்படி அந்தந்த சபைகளுக்கு, அந்தந்தத் தரப்புகளைச் சேர்த்து வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு விட்டனவா, வாக்களிப்புக்குத் தயாரா? அந்த இடங்களில் எல்லாம் தேர்தல் குறிப்பிட்ட தினத்தில் நடக்குமா? அல்லது பிற்போடப்படுமா? அப்படி பிற்போடுவதாயின் எந்தெந்த இடங்களில் தேர்தல் பிற்போடப்படும் என்ற நிலைமை பற்றிய பட்டியல் இன்னும் கூட மக்களுக்கு தெரியவில்லை. எல்லா விடயங்களிலும் குழப்பமே நீடிக்கின்றது.

போதாக்குறைக்கு இன்னும் பல வேட்பு மனு நிராகரிப்பு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எழுத்தாணை மனுக்கள் சென்றிருக்கின்றன. அவற்றை நாளை மறுதினம் திங்கட்கிழமை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுக்கிறது. நீதிமன்றம் பரிசீலனைக் கெடுத்தாலும் அந்த வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி நீதிமன்றம் உத்தரவிட்டால் அவற்றையும் சேர்த்து தேர்தலை திட்டமிட்டபடி நடத்தக்கூடிய நிலையில் தேர்தல் ஆணையம் இருக்கின்றதா என்பதும் தெளிவில்லை.

நாளை மறுதினம் நீதிமன்றத்தில் எடுக்கப்படக் கூடிய எழுத்தாணை மனுக்கள் விடயத்தில் நேரம் போதாமை காரணம் காட்டி அந்தக் கோரிக்கைகளை நீதிமன்றம் நிராகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் சில சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு பின்னர்தான் எந்தெந்த இடங்களில் தேர்தல், எங்கெங்கு ஒத்திவைப்பு என்பவை பற்றிய விவரம் எல்லாம் வெளியாக கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதற்குப் பின்னர் வேண்டுமானால் தேர்தல் சற்று சூடு பிடிக்க வாய்ப்பு உண்டு. அதுவரை இந்த மந்த நிலையே தொடரும்.

\+ + +

பதவியில் இருக்கும் போது அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஆட்டம் போடுபவர்கள், பதவி போன பின்னர்தான் அதன் விளைவுகளை சற்று சிந்தித்து பார்ப்பார்கள்.

இதற்கு முன்னர் சபாநாயகராக இருந்த மஹிந்த யாப்பா அபேவர்தன ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி. நீண்ட அனுபவம் உள்ளவர். ஆனாலும் சபாநாயகர் பதவியில் இருந்து அவர் பண்ணிய சொதப்பல் அநேகம்.

பொலிஸ்ஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்பு கவுன்ஸில் ஒரு முடிவை எடுக்க, அரசமைப்புக் கவுன்சிலின் தலைவர் தானே என்ற மமதையில் அந்த முடிவைத் தம்பாட்டில் மாற்றி அமைத்து, பிழையான பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு வழி செய்தவர் அவர். இப்போது அந்த நியமனமே நடுவீதியில் நிற்கிறது. அவருக்கு எதிரான வழக்கு நீதிமன்றத்தில் ஆராயப்படுகின்றது. விளைவுகளை அவர் சந்திக்க வேண்டி வரலாம்.

அதேபோன்றுதான் இணையப் பாதுகாப்பு சட்ட விடயம். அந்தச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட போது அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாவிடில் பல முக்கிய மாற்றங்கள் அதில் செய்யப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பரிந்துரைத்திருந்தது. ஆனால் அந்த மாற்றங்கள் செய்யப்படாமலேயே சாதாரண பெரும்பான்மையோடு அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்தார் அப்போதைய சபாநாயகர். இந்த நடவடிக்கை கடும் விமர்சனத்திற்கும் கண்டனத்துக்கு உள்ளானது.

இத்தகைய பிழையான சட்டமூலத்தை முழுமையாக நிராகரித்து, நீக்குவதற்கான புதிய சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆக, முன்னைய சபாநாயகர் அந்தப் பதவியை வைத்துக்கொண்டு சட்ட விரோதமாக செய்த நடவடிக்கைகள் எல்லாம் இப்போது திருத்தப்படுகின்றன. இதற்குத் தானா மஹிந்த யாப்பா அபயவர்த்தன இத்தனை ஆட்டம் போட்டார்?

## தந்தை செலுத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வி.டர்சிகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

டிப்பர் வாகனத்தின் பின்புறம் குழந்தை விளையாடிக் கொண்டிருந்த போது, அதனைக் கவனிக்காத தந்தை, டிப்பரைப் பின்னோக்கி நகர்த்தியுள்ளார். இதன் போது டிப்பர் சில்லுக்குள் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்ரமணியம், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் குழந்தையின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸார் மேதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாதிக்கப்பட்ட மக்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த வியாழக்கிழமை ஜே.வி.பி. கட்சியின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். தேர்தலுக்கு முன்னதாக, காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும் போன்ற பல்வேறு வாக்குறுதிகளை அநுரகுமார வழங்கியிருந்தார். எனினும், ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பில் எதுவும் பேசாமல் தையிட்டி விகாரை தொடர்பில் அவர் பேசியிருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுடனும், நாகதீப விகாரையின் விகாராதிபதி, ஆரியகுளம் நாக விகாரையின் விகாராதிபதி போன்ற மதத் தலைவர்களுடன் பேசி தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும். ஆனால், வடக்கு மற்றும் தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் தலையிட்டால் தீர்வைக் காண முடியாது என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

குறிப்பாக வடக்கில் செயற்படக்கூடிய அரசியல் கட்சிகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தடையாக இனவாதப் போக்கோடு செயற்படுகின்றன என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டியிருந்தார்.

தையிட்டியில்அமைக்கப்பட்டுள்ளவிகாரையானது ஒரு சட்டவிரோத கட்டடமாகும். அதில் தொல்பொருள் திணைக்களம் சம்பந்தப்படவில்லை. தொல்பொருள் தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்ற எந்தவொரு கண்டுபிடிப்பும் அந்த நிலப்பரப்பில் காணப்படவில்லை. மாறாக தையிட்டி விகாரைக்குரிய காணி எனக் கூறி பொதுமக்களின் 20 பரப்புக் காணி ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. தையிட்டி விகாரைக்குரிய அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு சில தினங்களிலேயே தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அதன் பின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் ஏகமனதாகக் கட்டுமானங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

எனினும், அதியுயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வையில் சட்டவிரோதமாக மக்களின் காணிகளில் விகாரை அமைக்கப்பட்டது. அந்த நாள் தொடக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணையாக அவர்களின் போராட்டங்களில் கலந்துகொண்டு வருகின்றோம்.

தையிட்டி விகாரைக்கு எதிரான மக்களின் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அல்லது வேறு தமிழ்க் கட்சிகளோ பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களுக்கு மாறாக எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தஜனாதிபதிஅநுரகுமாரபாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டில் தமிழ் கட்சிகள் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கின்றார். தாங்கள் இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை என அநுரகுமார ஒவ்வொரு மேடைகளிலும் கூறுகின்றார். அநுரகுமார யாரை இனவாதிகள் எனக் கூறினாரோ அந்தத் தரப்புகளே பொதுமக்கள் பாதிப்படையும் வகையில் தையிட்டி விகாரையைச் சட்டவிரோதமாக அமைத்தார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களின் நியாயமான போராட்டத்தையும் இனவாதம், மதவாதம் எனும் தவறான பரப்புரைகளை தெற்கில் செய்து வந்தார்கள். ஆனால், இன்று அநுரகுமாரவும் இனவாதிகள் செய்த அதே செயலையே செய்கின்றார். எந்தவொரு வித்தியாசமும் இல்லை.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணம் மக்கள் ஆணை தந்திருப்பதாகக் கூறி வருகின்ற நிலையில் தையிட்டி விகாரை பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். ஆனால், அதை விடுத்து தமிழ் அரசியல்வாதிகள் குழப்புகின்றனர் என்று குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறு போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கான காரணம் அநுர அரசு முன்னெடுக்கும் இனவாதத்தை மூடி மறைக்கவே ஆகும். தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் இனவாதப் பிக்குகளைக் காப்பாற்றும் வகையிலே இந்த அரச தரப்பினரும் செயற்படுகின்றார்கள்.

வடக்கு, கிழக்கில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரைகள் 07

## பாதிக்கப்பட்ட மக்களின்..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அனைத்தும் இராணுவத்தினராலே அமைக்கப்படுகின்றன. இராணுவத்தை வைத்து மக்களை மிரட்டி மக்கள் எதிர்க்க முடியாதவாறு ஆக்கிரமிப்புக்கள் தொடர்கின்றன.

தையிட்டியில் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் அரசியல்வாதிகளோடு நிற்பதை அரசு தடுக்க முயல்வது, மக்களை அச்சுறுத்தி அந்தக் காணிகளை தங்கள் தேவைக்கு அபகரிப்பதற்காவே. நாங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காவே செயற்படுகின்றோம். எங்கள் மக்கள் விரும்பினால் போராட்டங்களில் இருந்து விலகவும் தயார். ஆனால், தமிழ் மக்களை அச்சுறுத்தி அவர்களின் கோரிக்கைகளை மாற்ற ஜே.வி.பி முயன்றால் ஜே.வி.பியே ஏமாற்றமடைவார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்தில் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் தேசிய மக்கள் சக்தியின் கருத்துக்கள் அல்ல. அவை ஜே.வி.பியினுடைய சித்தாந்தங்களே. உண்மையான ஜே.வி.பியின் முகத்தை ஜனாதிபதி வெளிக்காட்டியிருக்கின்றார். அதை எங்களுடைய மக்கள் உணர்ந்து இந்தத் தேர்தலில் முடிவுகளை எடுக்க வேண்டும்.” – என்றார்.

## பிள்ளையானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கிழக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தனின் சாரதியைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு – வாழைச்சேனையில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை பிள்ளையானின் சாரதியான ஜெயந்தன் கைது செய்யப்பட்டார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி பிள்ளையான் அவரின் கட்சிப் பணிமனையில் வைத்துக் கொழும்பில் இருந்து சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து, அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றார்.

இந்தநிலையில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பிள்ளையானின் சாரதியான ஜெயந்தன் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதான ஜெயந்தன் உடனடியாகக் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர்கள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். ஜனாதிபதியின் உரையை விமர்சிக்கத் தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது.

வடக்குக்குச் சென்ற ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டே உரையாற்றியுள்ளார். அவரின் உரை தமிழ்க் கட்சியினருக்குத் தேர்தல் தோல்விப் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் அவர்கள் உளறுகின்றார்கள். தமிழ் மக்களின் எமக்கான ஆதரவைத் தமிழ்க் கட்சியினரால் தடுத்து நிறுத்த முடியாது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவோ அல்லது அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சியினரோ ஒருபோதும் இனவாத, மதவாத அரசியலை ஆதரிக்கமாட்டார்கள்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்துத்தான் வடக்கிலும், தெற்கிலும் கடந்த காலங்களில் அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கு முடிவு கட்டும் வகையிலேயே தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

வடக்கில் திஸ்ஸ விகாரையை வைத்து இனவாத அரசியலை முன்னெடுக்க எமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

மத்தியில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சி அமைத்தால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் நன்மைகளை ஏற்படுத்தும். ஏனெனில் ஊழல், மோடி இல்லாத ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியே. இதை எமது ஜனாதிபதியும் எமது கட்சி உறுப்பினர்களும் வெளிப்படையாகச் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது?” – என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நாட்டுப் பற்றாளர் நாள்

உலக வரலாற்றில் ஆயுதப் போராட்டங்களுக்கு நிகரான வலிமை உடையதாக அஹிம்சைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணம் கொடுத்தவர் மகாத்மா காந்தி. இந்திய தேச பிதா.

பிற்காலத்தில் அந்த காந்தி தேசத்திற்கே காந்தியத்தை போதித்தவர்கள் ஈழத் தமிழர்கள் இருவர்.

ஒருவர் - போராளியாக தியாகி திலீபன். மற்றவர் - சாதாரண தாயாக பாரதத்திற்கு காந்தியத் தத்துவத்தைப் புகட்டிய அன்னை பூபதி.

அந்த அன்னை பூபதியின் 37 ஆவது நினைவு தினம் இன்று ஆகும்.

தமிழ் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதியின் நினைவு நாளை உலகெங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் நாட்டுப் பற்றாளர் நாளாக அனுஷ்டிக்கின்றார்கள்.

இந்தத் தினத்தை - அன்னை பூபதி நினைவு நாளை - நாட்டுப் பற்றாளர் நாளாக 2006 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைமை பிரகடனப்படுத்தியிருந்தமை நினைவு கூரத்தக்கது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக தமிழர் தாயகத்துக்குள் நுழைந்த இந்திய இராணுவம், அமைதிகாக்கும் படை என்ற பெயரில் ஆக்கிரமிப்பு படையாக மாறி, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் நாச வேலையில் இறங்கிய போது, தமிழர்களுக்கு நீதி கேட்டு, இந்திய தேசத்திற்கு எதிராக அறப்போர் புரிந்து, தன்னையே ஆகுதியாக்கியவர் அன்னை பூபதி.

இந்தியப் படைகள் உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று கோரி, மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அஹிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்.

மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னால் உள்ள குருந்தை மர நிழலின் கீழ் அன்னை ஆரம்பித்த போராட்டம் ஒரு மாதம் நீடித்தது.

காந்திய வழியில் - அஹிம்சை நெறியில் - அறப் பாதையில் - அவர் நடத்திய தியாக வேள்வியின் குரல் ஆக்கிரமிப்பு படையை அனுப்பி இருந்த இந்தியாவின் காதுகளில் செவிமடுக்கப்படவில்லை. அதனால் காந்தி காட்டிய வழியில் ஒரு மாதம் உண்ணா நோன்பிருந்து 1988 ஏப்ரல் 19ஆம் திகதி சாவை அணைத்தார் அன்னை பூபதி.

தமிழர் தேச விடுதலைக்காக- ஈழத் தமிழர்களுக்கு நீதி, நியாயம் கிடைப்பதற்காக - அணு அணுவாகத் தன்னை அழித்து, தன் உடற் கலங்கள் ஒவ்வொன்றையும் ஆகுதியாக்கி, ஈழ மண்ணோடு ஈற்றில் கலந்தார் அன்னை பூபதி.

அவர் ஓர் ஆயுதப் போராளி அல்லர். அல்லது அரசியல் போராட்டக் கட்சிகளின் பிரதிநிதியும் அல்லர். தமிழர் தேசத்தில் ஓர் அன்னையாக, உரிமை கோரிப் போராடிய ஓர் இனத்தின் உத்தம தாயாக, தன்னை நிலைநிறுத்தி, அவர் முன்னெடுத்த போராட்டம் காந்தி தேசத்தின் காதுகளில் விழாமல் போனமை அந்த தேசத்திற்கே பேரிழுக்கு.

தங்களுடைய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் இலங்கை அரசு படைகளின் மிக மோசமான யுத்தக் கொடூரங்கள் மூலம் அழித்தொழிக்கப்பட்ட நிலையில் இன்று நிர்க்கதியாக அந்தரிக்கும் ஈழத் தமிழினத்தை, அஹிம்சை நெறியில், அதன் விடுதலைப் பாதையில் முன்னெடுத்து வழி நடத்துவதற்கு அன்னை பூபதி போன்ற பல தாய்மார்கள் உருவாக வேண்டும். அது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.













# மாங்குளம் பகுதியில் உணவகங்கள் மீது திடீர் சோதனை: மூடப்பட்ட உணவகம்

(பா.சதீசன்)

மாங்குளம் பகுதிக்குட்பட்ட உணவகங்கள் மீது திடீரென சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள உணவகங்களில் நேற்று ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரிகள் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நதிருசன், லோஜிதன், டிலக்சன் ஆகியோர்களினால் திடீர் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கையின் போது மாங்குள பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் மூடப்பட்டதுடன். மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் இனங்காணப்பட்டு உடனடியாக அழிப்பு செய்யப்பட்டது.


மூடப்பட்ட உணவகங்களில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை10 நாள்களில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் குறைபாடுகள் நிவர்த்தி சய்யப்படாமல் போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டிருந்தது.














# நத்தார் பாப்பாவாக மாறியுள்ள ஜனாதிபதி பரிசைக் களவாடித்தான் கொடுக்கின்றார்

## இப்படி விமர்சிக்கின்றார் சாணக்கியன் எம்.பி.

நத்தார் பாப்பா என்றால் தங்களிடம் உள்ள பரிசையே வழங்கவேண்டும். மற்றவர்களிடம் களவாடிக்கொடுக்கும் நத்தார் பாப்பாவாக அநுர குமார திஸநாயக்க மாறியுள்ளார் எனவும் இதுதான் இன்றைய நாட்டின் நிலைமை எனவும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகமும் தேர்தல் பிரச்சார கூட்டமும் நேற்று முன்தினம் விளாவெட்டுவான் ராஜா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் –

இந்த நாட்டின் தேர்தல் சட்டங்களை ஜனாதிபதி மீறுகின்றார் என்று நாட்டின் தேர்தல் ஆணைக்குழு கடிதம் எழுதிய முதலாவது சந்தர்ப்பம் இந்த தேர்தலில் தான் நடைபெற்றுள்ளது. ஒரு நாட்டின் ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறுகின்றார், தேர்தல் சட்டங்களை மீறுவதை நிறுத்துங்கள் என்று ஜனாதிபதி ஒருவருக்கு கடிதம் எழுதிய சந்தர்ப்பம் 2025ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலிலேயே நடைபெற்றுள்ளது.

தற்போது கிறிஸ்தவ மக்களின் ஈஸ்டர் பண்டிகை வருகின்றது. ஆனால் ஜனாதிபதி ஈஸ்டர் பண்டிகையை நத்தார் பண்டிகை வருகின்றது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாரோ  தெரியாது. ஏனென்றால் நத்தார் பண்டிகை கொண்டாடப்படும் காலப்பகுதியில் நத்தார் பாப்பா வருவார், அவர் குழந்தைகளுக்கு பரிசுகள் எல்லாம் வழங்குவார். நத்தார் பாப்பா திரிவது போன்றுதான் இன்று ஜனாதிபதி வடக்கு, கிழக்கு முழுவதும் திரிகின்றார்.



நத்தார் பாப்பாக மாறிவிட்ட அநுர குமார திஸநாயக்க, மன்னாரையும் புத்தளத்தையும்யும் இணைக்கும் வீதியை உடனடியாக செய்யப் போகின்றேன் என்று கூறுகின்றார். ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது மன்னார் – புத்தளம் வீதியை அமைக்கவேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா? உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர்தானா – நீங்கள் நத்தார் பாப்பாவாக மாறிய பின்னர்தானா – உங்களுக்கு இது தெரியவந்தது?

ஜனாதிபதியின் சொந்த ஊரில் ரயில் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக ஆய்வு செய்வதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மன்னார் – புத்தளம் வீதியை அமைப்பதற்கான ஆய்வு செய்வதற்கு ஒரு 10 மில்லியன் ரூபாவினை அவர் ஒதுக்கியிருந்தால் அவர் கூறுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

இவை அனைத்தும் தேர்தலுக்காக வழங்கப்படும் போலியான வாக்குறுதிகள். சில எருமை மாடுகளைப் போல் உள்ள அமைச்சர்கள்தான் ஜனாதிபதியை நத்தார் பாப்பா போல இழுத்துக் கொண்டு செல்கின்றார்கள்.

இன்னும் ஒரு கருத்தினையும் ஜனாதிபதி கூறியிருந்தார். சனத் ஜயசூரியவிடம் சொன்னாராம் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கட் மைதானத்தை உருவாக்குங்கள் என்று. அவ்வாறானால் சனத் ஜயசூரிய நாட்டின் ஜனாதிபதியா? அல்லது அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியா?

இந்திய பிரதமர் இலங்கை வந்தபோது 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தினை கைப்பற்றிய இலங்கை அணியை சந்தித்திருந்தார். அதன்போது சனத் ஜயசூரிய வடக்கில் ஒரு சர்வதேச கிரிக்கட் மைதானத்தினை அமைக்க வேண்டும் என்று கோரிக்கையினை முன்வைத்திருந்தார். நத்தார் பாப்பா என்றால் தங்களின் பரிசினையே வழங்கவேண்டும். மற்றவரின் பரிசினை களவெடுத்துக் கொடுப்பவராக இன்று அநுரகுமார திஸநாயக்க மாறியுள்ளார். இதுதான் இந்த நாட்டின் நிலைமை. – என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன் மற்றும் இ.சிறிநாத், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், பட்டிப்பளை கிளையின் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை தமிழரசு கட்சி சார்பில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச சபைக்காக போட்டியிடும் வட்டார வேட்பாளர்கள் 10 பேரும் பட்டியல் வேட்பாளர்கள் 8 பேரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# உயிர்த்த ஞாயிறு தினத்தில் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்புச் செயலாளர்முப்படைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா இந்த ஆலோசனையை விடுத்துள்ளார்.

மேலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பாதுகாப்பு செயலாளர் இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழலில் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகளில் பொதுமக்கள் கலந்துகொள்ளும் வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.




# வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 713 பேர் வாகன விபத்துக்களில் உயிரிழப்பு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 713 பேர் உயிரிழந்துள்ளனர்.

685 விபத்துக்களில் இந்த உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டில் 31 வாகன விபத்துக்கள் குறைவாகப் பதிவாகியுள்ளன.

இதற்கமைய கடந்த ஆண்டில் குறித்த காலப்பகுதிக்குள் பதிவான 713 வாகன விபத்துக்களில் 744 பேர் உயிரிழந்தனர்.

பண்டிகைக் காலத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 105 பேர் உயிரிழந்துள்ளனர்.103 விபத்துக்களில் இந்த உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

இந்த காலப்பகுதிக்குள் 934 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.

எவ்வாறாயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த காலப்பகுதிக்குள் 23 வாகன விபத்துக்கள் குறைவாகப் பதிவாகியுள்ளன.

இதற்கமைய கடந்த ஆண்டில் குறித்த காலப்பகுதிக்குள் பதிவான 126 வாகன விபத்துக்களில் 128 பேர் உயிரிழந்தனர்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சந்திரசேகரன் குழுவின் யாழ்ப்பாணச் சித்து விளையாட்டுக்கள் விரைவில் வெளியாகும் என்கிறார் முன்னாள் தவிசாளர் நிரோஷ்




(எஸ்.நிதர்ஷன்)

தமது ஆட்சியில் சட்டம் ஒழுங்கை வலுப்படுத்துவோம், ஊழல் மோடிகளை இல்லாதொழிப்போம், சமூக சீர்திருத்தங்களை செய்வோம் என்று கூறிவரும் சந்திரசேகரன் குழுவினர் யாழ்பாணத்தில் பல கிராமங்களிலும் சமூக சீர்கேடாகப் பல விளையாட்டுக்களை செய்கின்றார்கள்.

அவர்களது இந்த சித்து விளையாட்டுக்கள் விரைவில் புகைப்படங்களாகவும், வீடியோக்களாகவும் வெளியாகும் என வலிகாமம் கிழக்கின் முன்னாள் தவிசாளர் நிரோஷ் சவாலாகத் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்து அவர் இந்த விடயங்களைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியின் பிரசாரப் பேச்சுக்கள் மிகவும் கீழ்த்தரமானவையாகவும் மக்களை அச்சுறுத்துவனவாகவும் இருக்கின்றன.

குறிப்பாக தன்னுடைய கட்சியின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் வந்தால்தான் அபிவிருத்திக்கானான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்று மிரட்டலாகக் கூறுகின்றார்.

இது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் கலாசாரத்தைக் காட்டுகின்றது.

அது மட்டுமல்லாது மக்களையும் தனித்துவமான சபைகளினதும் அதிகாரங்களை அச்சுறுத்துவதாகவும் இருக்கின்றது.

இவ்வாறு சிறுமைத்தனமாக ஜனாதிபதி செயற்படுவது வெட்கக்கேடானது.

உள்ளூராட்சி மன்றங்கள் அரசின் எடுபிடிகள் அல்ல.

அவை உள்ளூர் வளங்களை கொண்டு மக்கள் தமது பிரதேசத்தின் ஆளுகையை முன்னெடுக்கும் ஓர் அபிவிருத்திக்கான அரசியல் கட்டமைப்பு.

மக்களிடம் பெறும் சோலை வரியாலும், முத்திரை தீர்வை வரியாலும், நீதிமன்ற குற்ற தண்டப் பணங்கள், சந்தை குத்தகைகளூடாக கிடைக்கும் வருமானங்கள், கடைத் தொகுதிகளின் வரிகளூடாக கிடைக்கும் பெரு நிதிகளே சபைகளின் நிதி பெறும் வழிகளாக இருக்கின்றன.

அந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்கள் தத்தமது வளங்களை கொண்டு தான் நிதியை ஈட்டி தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனவே தவிர, மத்திய அரசின் தயவில் உள்ளூராட்சி மன்றங்களும் செயற்படவில்லை என்பதை அநுரவும், அவருடைய நாடளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஓர் உள்ளூர் அதிகார சபை தன் ஆளுகைக்குள்ளேயே அப்பிரதேசத்தின் அனைத்து செயற்றிட்டங்களும் அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் தனித்துவம் கொண்டவை. சபைகள் ஒவ்வொன்றும் ஒரு குட்டி அரசாங்கம். அதன் தவிசாளருக்கு அப்பிரதேச சபையின் உச்ச அதிகாரம் இருக்கின்றது.

இதில் மக்கள் தெளிவுற வேண்டும்.

மேலும் சமூக நலன்புரி திட்டங்களை வழங்குவதாக கூறி சர்வதேச நாடுகளிடம் இருந்து வரும் பல நூறு மில்லியன்களை பெற்று வெளிவிவகார அமைச்சு என்ற போர்வையில் அதனூடாக கையாண்டு சபைகளுக்கு நிதிகளை விடுவிக்கும் முறையை கையாண்டு வருகின்றன.

அதன்படி தற்போது கிடைக்கும் நிதியை மத்திக்கு கையகப்படுத்தவே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இதேவேளை பல பொய்களை கூறி மக்களை ஏமாற்றிய அநுர அரசு, அதில் தோல்விகண்டு இயலாமல் போனதால் இப்போது அச்சுறுத்தும் செயற்பாடாகத் தன்னை முன்னெடுக்க முயல்கின்றது.

அது மட்டுமல்லாது சந்திரசேகரன் குழுவினர் பலூன் ஊதிக்கொண்டிருக்கும் ஒரு சிறு பிள்ளைகள்.

இந்த பால்குடிகள் ராஜபக்ஷக்கள் கூட செய்யாத அடக்கு முறைகளையும், அநியாயங்களையும் அட்டூழியங்களையும் செய்கின்றனர்.

எனவே மக்கள் இதில் தெளிவாக இருப்பது அவசியம். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் பிரதேசங்களில் இத்தரப்புக் காலூன்றினால் அது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த இருப்பையும் இல்லாது செய்துவிடும். - என்றும் தெரிவித்திருந்தார்.



# மன்னாரில் ஜனாதிபதி கூறியவை உண்மைக்கு மாறான தகவல்கள்!

## பிய்த்து உதறுகின்றார் சிவகரன்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் வைத்து ஜனாதிபதி உண்மைக்கு மாறான தகவலையே வழங்கி விட்டுச் சென்றுள்ளார். நடைபெறுகின்ற சம்பவத்தை, தேர்தல் மேடையில் வாக்குப் பெறுவதற்காக இல்லை என்று கூறுவது அரசினுடைய ஆட்சி முறைமைக்கே அவமானம் ஆகும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னாரிற்கு வியாழக்கிழமை தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க காற்றாலை விடயம் சம்பந்தமாக முன்னுக்கு பின் முரணான தகவலை வழங்கி விட்டுச் சென்றுள்ளார். அவருடைய தகவலை பார்க்கின்ற போது கிராமத்து பழ மொழியாக "ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம், உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம்" என்பது ஞாபகம் வருகின்றது. அவரது கதையும் அவ்வாறே அமைந்துள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வு போன்ற திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை அரசாங்கம் அரச அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

அது மாத்திரம் இல்லாது, 16-01-2025 அன்று மாவட்டச் செயலகத்தில் காற்றாலை திட்டம் சம்பந்தமான கூட்டம் நடத்தப்பட்டு, தற்காலிகமாக அந்தத் திட்டத்தை இடை நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர் 28.01.2025 அன்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானங்கள் எவையும் நடைமுறைக்கு வரவில்லை. தற்போது கூட மன்னார் சௌத்பார் பகுதியில் காற்றாலை மின் திட்டத்திற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் ஜனாதிபதி நேற்றைய (நேற்று முன்தினம் நடந்த) கூட்டத்தில் அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்தார். தற்போது நான்கு காற்றாலைகள் அமைக்கும் வேலைத்திட்டம் இடம் பெற்று வருகிறது. அதற்கான புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. தாழ்வு பாட்டில் 10 காற்றாலைகள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன. அதற்கான சுற்றாடல் மதிப்பு அறிக்கை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று தடவை அவர்கள் கள ஆய்வுக்கு வந்த போது திருப்பி அனுப்பப்பட்ட போதும் கூட அந்த திட்டத்தை அரசு கைவிடுவதாக இல்லை.

மூன்றாவது திட்டமான கரையோரத்தில் இருந்து மணல் அகழ்வு செய்வதற்கான நில அளவீடு செய்வதற்கு அரச திணைக்களங்கள், அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதனை வழங்குவதற்கான துரித நடவடிக்கை இடம் பெற்று வருவதாக அறிகின்றோம்.

இந்த மூன்று திட்டங்களும் மன்னாரிலே நடைபெறுவதற்கும், நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குமான சூழலையே கொண்டுள்ள நிலையில். ஜனாதிபதிக்கு அவரது கட்சிக்காரர்கள் அல்லது அரச அதிகாரிகள் தவறான தகவல்களை வழங்குகின்றார்கள்.

அல்லது ஜனாதிபதி இதனை அரசியல் மேடையாகப் பயன்படுத்துகின்றாரோ எனத் தெரியவில்லை. மன்னாரில் வைத்து ஜனாதிபதி உண்மைக்கு மாறான தகவலையே வழங்கி விட்டுச் சென்றுள்ளார். நடைபெறுகின்ற சம்பவத்தை தேர்தல் மேடையிலே வாக்குப் பெறுவதற்காக இல்லை என்று கூறுவது அரசினுடைய ஆட்சி முறைமைக்கான அவமானம் ஆகும்.

இடது சாரித்துவத்தில் ஆட்சி நடத்துகின்றோம் என கூறுகின்றவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களை – களத்தில் ஒன்று இடம் பெற, வார்த்தைகளில் இன்னும் ஒன்றை பேசுவது என்பது – ஜனநாயக விரோதம் ஆகும்.

எனவே இவ்விடயங்களை ஜனாதிபதி உடனடியாக கவனத்தில் எடுத்து அவர் கூறியமை போல் இத்திட்டத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறைத்த பட்ச சூழல் பாதிப்போடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறி இருந்தார். அரசு ஏமாற்றும் வார்த்தைகளாகவே அதனைப் பார்க்கின்றோம். இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடாது என கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம். மன்னார் மக்கள் இத்திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். – எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதியின் கருத்து குறித்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார்,மீனவ அமைப்புக்களின் பிரதிநிதி என்.எம்.ஆலம் ஆகியோரும் கருத்துக்களை தெரிவித்தனர்.

# திருமலை சமுத்திர ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயத்தில் நேற்று முதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு



(எஸ்.கீதபொன்கலன்)

புதிதாக அமைக்கப்பட்ட திருகோண மலை, உவர்மலை திருவருள்மிகு பூலக்ஷ்மி மகாலக்ஷ்மி சமேத சமுத்திர ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய எண்ணெய்க்காப்பு நிகழ்வு நேற்றுக் காலை ஆரம்பமாகி, இன்று பிற் பகல் வரை நடைபெறுகின்றது. நாளை ஞாயிற் றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறவுள் ளது.









### ஆளுங்கட்சியினர் பிரதேச அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும்:

# வவுனியா வைத்தியசாலை பிரேத குளிரூட்டி பழுது தொடர்பில் செல்வம் எம்.பி. காட்டம்



(கி.வசந்தன்)

ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் வன்னி பிரதேசத்தில் இருந்த போதிலும் வவுனியா வைத்தியசாலையில் பல நாள்களாக இயங்காமல் இருக்கின்ற பிரேத அறையின் குளிரூட்டி சீர் செய்வது தொடர்பில் தமது சுகாதார அமைச்சின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு செல்லாமை கவலைக்குரிய விடயம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் அதில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையின் குளிரூட்டி பல மாதங்களாக செயல்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக மரணமடைந்தவர்களின் உறவினர்கள் தமது சொந்தச் செலவில் சடலங்களை செட்டிகுளம் வைத்தியசாலையின் குளிரூட்டியில் வைத்து, மீண்டும் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான பணத்தை செலவழித்து சடலத்தை செட்டிகுளத்துக்கும் வவுனியாவுக்கும் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஏற்படுகின்றது. இது இந்தப் பிரதேசத்து மக்களுக்குப் பாரிய சுமையை ஏற்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும்.

தமது ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று அறிக்கை விட்டு மக்களைப் பொய்யாகத் திசை திருப்பி, பிரதி அமைச்சுக்களையும், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினர் வெறும் வாய்ச் சவால் விடுவதற்கு மாத்திரமே சிறப்பானவர்களாகக் காணப்படுகின்றனர்.

தமது பிரதேசத்தில் இவ்வாறான ஒரு நிலைமை காணப்படுவது தொடர்பில் அறிந்து கொள்ளவோ அதற்கான நடவடிக்கையை தமது ஆட்சியில் உள்ள சுகாதார அமைச்சருடன் கதைத்து செயல்படுத்தவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் தான் மீண்டும் மக்களிடம் பொய்களைக் கூறி அவர்களைத் திசை திருப்ப முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை மாத்திரமல்ல தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களைக் கூடக் கேட்பதற்கு தயாரில்லை என்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களே சாட்சியாக வுள்ளனர்.

மக்கள் மத்தியில் சென்று அவர்களின் தேவைகளை அறிந்து கொள்ள முடியாத பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாம் பாரிய சாதனைகளை செய்து விட்டவர்களாகத் தம்பட்டம் அடிப்பதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனரே தவிர, உருருப்படியாக எதையும் செய்யவில்லை. ஓர் அத்தியாவசிய தேவையாகக் காணப்படுகின்ற – வடக்கில் முக்கியமான – தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறுகின்ற – வைத்தியசாலையின் தேவைகளை கூட நிறைவேற்ற முடியாதவர்களாகத் தான் இவர்கள் உள்ளார்கள் என்பதை உண்மை.

இது மாத்திரமன்றி வவுனியா வைத்தியசாலையில் கோலாகலமாக திறக்கப்பட்ட இருதய சிகிச்சை பிரிவு இது வரை செயல்படுத்தப்பட முடியாமல் வைத்திய நிபுணர்கள் இன்றி மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இது தொடர்பிலும் அவர்கள் அக்கறை எடுப்பவர்களாகத் தெரியவில்லை.

எமது கருத்துக்களைக் கேட்கக் கூடத் தயாராக இல்லாத இந்த அரசாங்கம்தாமாவது தங்களது பிரதேசத்தில் தேவைகளை அறிந்து செயல்படுத்த முன்வர வேண்டும். – எனவும் தெரிவித்துள்ளார்.

# சம்மாந்துறை வயலில் இளைஞர் மின்னல் தாக்கியதில் உயிரிழப்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை செனவட்டை பிரதேசத்தில் நேற்று வயலில் வேலை செய்து கொண்டிருந். இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மரணமடைந்தவர் சம்மாந்துறை, சென்னல்கிராமம் 02 பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம் அறிவிப்பு



மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் நடந்த வன்முறையை மாநில அரசு கட்டுப்படுத்த தவறியதால், மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என விஸ்வ ஹிந்து பரிஷத் வலியுறுத்தியுள்ளது. இதை வலியுறுத்தும் விதமாக இன்று சனிக்கிழமை நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய வி.எச்.பி. தலைவர் அலோக் குமார்,

“மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத்தில் நடந்த இந்துக்களுக்கு எதிரான கொடூரமான கொலை, கலவரம், தீ வைப்பு, வன்முறை, கொள்ளை மற்றும் பெரிய அளவிலான இடப்பெயர்வு சம்பவங்கள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தி இருக்கின்றன. வக்பு சட்டத் திருத்தத்துக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் நடக்கின்றன. ஆனால், மேற்கு வங்கத்தில் மட்டும் இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மிகப் பெரிய அளவில் நடக்கின்றன.

முர்ஷிதாபாத்தில் நடந்த முழு சம்பவத்தையும் தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) விசாரிக்க வேண்டும். மால்டாவில் உள்ள நிவாரண முகாம்களில் வசிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள இந்து சமூகத்துக்கு உதவ முன்வரும் அமைப்புகளை தடுக்கும் மாநில அரசின் செயல் மனிதாபிமானமற்றது.

இந்துக்களுக்கு எதிராக நடக்கும் தாக்குதல்கள் குறித்து முதல்வர் மம்தா பானர்ஜி அமைதியாக இருப்பது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது. இந்தத் தாக்குதல்கள் வெளிநாட்டு வங்கதேசத்தவர்களின் ஈடுபாட்டுடன் திட்டமிடப்பட்டவை என்றும் இந்தப் பிரச்சினை சர்வதேசமானது என்றும் மம்தா பானர்ஜி கூறுகிறார். அப்படியானால், இந்தச் சம்பவம் குறித்து என்.ஐ.ஏ. விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் ஏன் கோரவில்லை?

பாதிக்கப்பட்ட இந்துக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். தாக்குதல் நடத்தியவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். சொத்துக்கள் சூறையாடப்பட்ட, எரிக்கப்பட்ட அல்லது நாசப்படுத்தப்பட்ட சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மேலும், மாநிலத்தில் உள்ள இந்துக்களுக்கான பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்.

பல்வேறு பிரச்சினைகளுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடப்பது பொதுவானது. ஆனால், போராட்டங்களின் பெயரில் இந்துக்கள் மீதான தாக்குதல்களும் கொடூரமான கொலைகளும் சமீப ஆண்டுகளாக மேற்கு வங்கத்தில் ஒரு போக்காக மாறிவிட்டது. அரசாங்கத்தின் அலட்சியமும், தீவிரவாத, சமூக விரோத சக்திகளுக்கான ஆளும் கட்சியின் நேரடி அல்லது மறைமுக ஆதரவும் இல்லாமல் இது நடக்காது. எனவே போராட்டக்காரர்கள், பிரச்சினை எதுவாக இருந்தாலும் இந்துக்களை குறிவைப்பது ஏன் என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மாநில அரசு தனது குறைகளை மறைக்க பாதிக்கப்பட்ட பல குடும்பங்களை, முர்ஷிதாபாத்துக்கு வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்புகிறது. மத்திய பாதுகாப்புப் படையினரால் வலுவான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்காவிட்டால், தங்கள் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்கும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள். தற்போதைய சூழலில், தங்கள் உயிரைப் பணயம் வைத்து அங்கு செல்ல மாட்டோம் என பலரும் கூறுகிறார்கள். ஆனால், மாநில அரசு அவர்களை வலுக்கட்டாயமாக அங்கே மீண்டும் செல்ல வற்புறுத்துவது அவர்களை உயிருடன் கொல்வது போன்றதல்லவா? மாநில அரசு இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முர்ஷிதாபாத்தில் நடந்த வன்முறையைக் கண்டித்து, நாடு முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் விஎச்பி இன்று சனிக்கிழமை போராட்டங்களை நடத்தும். இந்தப் போராட்டங்களின் ஒரு பகுதியாக, மேற்கு வங்கத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்துவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர்களிடம் மனு அளிக்கப்படும்.” என்று தெரிவித்தார்.



# தி.மு.க. அமைச்சர்களால் தமிழகத்துக்கு தலைகுனிவு

## அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

தி.மு.க. அமைச்சர்களால் தமிழகத்துக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது என்று அ.தி.மு.க. ஆர்ப்பாட்டத்தில் வி.வி.ராஜன் செல்லப்பா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தி.மு.க. அமைச்சர் பொன்முடி, பெண்களை இழிவுபடுத்தியும், ஆபாசமாக பேசியதையும் கண்டித்து, அ.தி.மு.க. புறநகர் கிழக்கு மாவட்டம் சார்பில் ஒத்தக்கடையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்டச் செயலாளரும், அமைப்பு செயலாளருமான வி.வி. ராஜன் செல்லப்பா எம்எல்ஏ தலைமை வகித்து பேசினார். அப்போது, வி.வி. ராஜன் செல்லப்பா உரையாற்றுகையில்,

“அமைச்சர் பொன்முடி தொடர்ந்து பெண்களை கேலியாக பேசுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார்.

முதலில் ஓ.சி. பஸ் என்றார். பின் பெண்களை சாதியை சொல்லி இழிவுபடுத்தினார். அவரை, அவரது கட்சித் தலைமை கண்டிக்காததால் அமைச்சர் பொறுப்பில் இருந்துகொண்டு அவர் இப்படி பொறுப்பில்லாமல் பேசி வருகிறார். அவரைப் போலவே மற்ற அமைச்சர்களும், தங்கள் பேச்சுகளில் கண்ணியத்தை கடைபிடிக்காமல் அநாகரிகமான வார்த்தைகளை பயன்படுத்துகிறார்கள். அவர்களை கண்டிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அச்சப்படுகிறார்.

தி.மு.க. அமைச்சர்களால் தொடர்ந்து தமிழகத்துக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. அதன் விளைவு தற்போது நீதிமன்றமே முன்வந்து அமைச்சர் பொன்முடி மீது வழக்கை பதிவு செய்யுங்கள் என்று கூறியுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டில் கடுமையான மின்வெட்டால் தி.மு.க. ஆட்சியை பறிக்கொடுத்தது. ஆனால், 2026 தேர்தலில் தி.மு.க. அமைச்சர்களின் மோசமான ஆபாச பேச்சுகளால் தி.மு.க. ஆட்சியை இழக்கப்போகும் வரலாறு நிச்சயம் உருவாகும்.” என்றார்.

# ஒரு கிராமத்துக்கே காலணி வழங்கினார் ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண்

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்துக்கு சுமார் 350 காலணிகளை அம்மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் அனுப்பி உள்ளார்.

முன்னதாக, அந்த கிராமத்துக்கு சென்ற அவர், வயதான பெண்கள் காலணி அணியாமல் வெறுங்கால்களோடு நடப்பதைக் கண்டுள்ளார்.

உள்ளூர் மக்களின் நிறை, குறைகளை அறியும் வகையில் இரண்டு நாள் பயணமாக அரக்கு மற்றும் தம்ப்ரிகுடா பகுதிகளுக்கு அவர் பயணம் மேற்கொண்டார். அப்போது அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் உள்ள பெதபாடு என்ற கிராமத்துக்கு சென்றிருந்தார்.



அப்போது அந்தக் கிராமத்தை சேர்ந்த வயதான பெண்கள் உட்பட பெரும்பாலானவர்கள் காலணிகள் அணியாமல் இருப்பதை ஜன சேனா கட்சியின் தலைவரான பவன் கல்யாண் கவனித்தார்.

அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பிய கையோடு, அந்தக் கிராமத்தில் வசித்து வரும் அனைவருக்கும் காலணிகளை அனுப்பி உள்ளார்.

அந்தக் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 350 என தகவல். தற்போது அந்த கிராம மக்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களின் குறையை அறிய எந்த வொரு அரசியல் தலைவரும் தங்கள் இருப்பிடத்துக்கு வருவதில்லை. ஆனால், பவன் கல்யாண் அதை முறியடித்துள்ளார். எங்கள் இடத்துக்கு வந்து எங்கள் குறைகளை கேட்டுக் கொண்டு சென்றுள்ளார். அவருக்கு நன்றி என என மக்கள் கூறியுள்ளனர்.



## அமெரிக்க வரி விதிப்பு:

# 15 நாடுகளுடன் கலந்துரையாட டொனால்ட் ட்ரம்ப் தீர்மானம்

சில நாடுகளுக்கு விதிக்கப்பட்ட தீர்வை வரி திருத்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், தென்கொரியா, இந்தியா உள்ளிட்ட 15 நாடுகளுடன் கலந்துரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தம் 100 சதவீதம் சாத்தியமாகும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய இறக்குமதிகள் மீது ஆரம்பத்தில் 20 சதவீத வரி விதித்து பின்னர் 90 நாள்களுக்கு அதைத் தாற்காலிகமாக ட்ரம்ப் நிறுத்தினார்.

இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியுடனான சந்திப்பைத் தொடர்ந்து இந்த கருத்துக்கள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசா போரில் கைகளை இழந்த சிறுவனின் புகைப்படத்திற்கு கிடைத்த அங்கீகாரம்





காசா மற்றும் இஸ்ரேலுக்கிடையில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் மோதலால் 51,000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதில் பெரும்பாலோனோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காசாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் இரு கைகளையும் இழந்த 9 வயது சிறுவனின் புகைப்படம் World Press Photo 2025 போட்டியில் காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது இந்த ஆண்டுக்கான World Press Photo ஆக அந்த சிறுவனின் புகைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் டைம்ஸ் இதழுக்காக பாலஸ்தீன புகைப்படக் கலைஞர் சமர் அபு எலூஃப் எடுத்த இந்த புகைப்படமே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

141 நாடுகளைச் சேர்ந்த 3,778 புகைப்படக் கலைஞர்கள் சமர்ப்பித்த 59,320 புகைப்படங்களிலிருந்து மதிப்புமிக்க 68 ஆவது World Press Photo போட்டியின் வெற்றியாளராக சமர் அபு எலூஃப் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.04.2025




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறுகடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதற்றத்தைச் சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதற்றத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள். இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.04.2025




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்வுக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.



# வவுனியா வேலங்குளத்தில் காட்டு யானைகள் அட்டகாசத்தால் தென்னைப் பயிர்கள் சேதம்

(கி.வசந்தன்)

வவுனியா வேலங்குளம், கோவில் புளியங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு உட்புகுந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த பெருமளவு தென்னை பயிர்களை சேதமாக்கிச் சென்றுள்ளன.

குறிப்பாக வேலங்குளம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மடுக்குளம், கோவில்மோட்டை, செங்கற்படை, சின்னத்தம்பனை, சிவநகர், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம் போன்ற கிராமங்களுக்குள் அண்மைய நாள்களில் தொடர்ச்சியாக செல்கின்ற காட்டு யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் தோட்டபயிர்களை சேதமாக்கிச் செல்கின்றன.

நேற்று முன்தினம் இரவும் இந்தக் கிராமங்களுக்குள் உட்புகுந்த யானைகள் காய்க்கும் நிலையில் இருந்து தென்னைபயிர்களை நாசமாக்கிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் தமக்கான தீர்வை எந்த ஒரு அதிகாரிகளும் இதுவரை முன்வைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எமது கிராமத்தை சுற்றியானை வேலியை அமைத்து தருமாறு பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம், ஆனால் இதுவரை கிடைக்கவில்லை என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.